# TAMIL NADU
# GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.12A CHENNAI WEDNESDAY, MARCH 30,2011**

**Panguni 16, Thiruvalluvar Aandu-2042**


## Part VI --- Section 2

(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ DC / 8– 14, 14–03–2011 நாளிட்டது**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்கு ஒருசில திருத்தம் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தம் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும் ;

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம்36/2003) 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/DC/8/1இன்படி பிறப்பிக்கப்பட்டதும், இதன்மூலம், (இதன்பின்பு இதில் முதன்மை விதித்தொகுப்பு என்று குறிப்பிடப்படுவதுமான) தமிழ்நாடு மின்பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது:–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(அ) இந்த விதித் தொகுப்பு ''2011 தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித்தொகுப்பு'' என்று வழங்கப்பெறும்.

(ஆ) இது, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித்தொகுப்பின் 51ஆம் கூறின் திருத்தம் :-**

(அ) முதன்மை ஒழுங்குமுறை விதியில், 51ஆம் கூறின், (1)ஆம் உட்கூறில் (d) இனத்திற்குப் பதிலாக பின்வரும் இனம் அமைக்கப்படுதல் வேண்டும் : –

*''மின் பகிர்மான உரிமம்தாரரின் தலைமைப் பொறியாளர் படிநிலைக்கு குறையாத மூன்று பிரதிநிதிகள் ''*

(ஆ) முதன்மை ஒழுங்குமுறை விதியில், 51ஆம் கூறின், (3) ஆம் உட்கூறின் (a) இனத்தில், 'மாநில மின்சாரக் கட்டமைப்பு விதித்தொகுப்பையும்' என்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

( தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**(ரா.வெ. ராஜா)**
செயலாளர்